உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பனையபுரம் பறவைபுரம்

எனவழங்கும்

திருப்புறவார் பனங்காட்டூர்த்

தேவாரப் பதிகம்.

சைவசமயகுரவாரன

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளால்

அருளிச்செய்தது.

இஃது

ஸ்ரீமத்

சிவசண்முகானந்த சுவாமிகளால்

விழுப்புரம்

ஸ்ரீ ருக்மணி விலாஸ் பிரஸில்

பதிப்பித்து

வெளியிடப்பட்டது.

1925.

உ

சிவமயம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பண் சீகாமரம்.

விண்ணமர்ந்தன மும்மதில்களை வீழவெங்கணையா லெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலிசேர் புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொருபாகமாகிய பிஞ்ஞகாபிறைசேர் நுதலிடைக்
கண்ணமர்ந்தவனே கலந்தார்க்கருளாயே. (௧)

நீடல்கோடலலர் வெண்முல்லை நீர்மலர்நிரைத்தாதளஞ்செய்யப்
பாடல்வண்டறையும் புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதயன் மின்றுளங்கவெண்குழை துள்ளநள்ளிரு
ளாடுஞ்சங்கரனே யடைந்தார்க்கருளாயே. (௨)

வாளையுங்கயலும்மிளிர் பொய்கைவார் புனற்கரையருகெலாம்வயற்
பாளையொண்கமுகம் புறவார்பனங்காட்டூர்ப்
பூளையுநறுங்கொன்றையுமதமத்தமும் புனைவாய்கழலிணைத்
தாளையேபரவுந் தவத்தார்க்கருளாயே. (௩)

மேய்ந்திளஞ்செந்நென்மென்கதிர்கவ்விமேற்படுகலின்மேதிவைகறை
பாய்ந்ததண்பழனப் புறவார்பனங்காட்டூ
ராய்ந்தநான்மறைபாடி யாடுமடிகளென்றென்றரற்றி நன்மலர்
சாய்ந்தடிபரவுந் தவத்தார்க்கருளாயே (௪)

செங்கயல்லொடுசேல்செருச்செயச் சிறியாழ்முரறேனினத்தொடு
பங்கயம்மலரும் புறவார்பனங்காட்டூர்க்
கங்கையுமதியுங்கமழ்சடைக் கேண்மையாளொடுங்கூடிமான்மறி
யங்கையாடலென் னேயடியார்க்கருளாயே. (௫)

நீரினார்வரைகோலிமால்கடனீடிய பொழில்சூழ்ந்துவைகவும்
பாரினார்பிரியாப் புறவார்பனங்காட்டூர்க் [றுஞ்
காரினார்மலர்க்கொன்றைதாங்கும் கடவுளென்றுகைகூப்பிநாடொ
சீரினால்வணங்குந் திறத்தார்க்கருளாயே. (௬)

கையரிவையர்மெல்விரல்லவைகாட்டியும் மலர்க்காந்தளங்குறி
பையராவிரியும் புறவார்பனங்காடூர்
மெய்யரிவையோர்பாகமாகவுமேவினாய் கழலேத்திநாடொறும்
பொய்யிலாவடிமை புரிந்தார்க்கருளாயே, (௭)

தூவியஞ்சிறை மென்னடையனமல்கியொல்கிய தூமலர்ப்பொய்கை
பாவில்வண்டறையும் புறவார்பனங்காட்டூர்
மேவியந்நிலையாயரக்கன்றோளடர்த்தவன்பாடல்கேட்டரு
ளேவியெம்பெருமா னென்பவர்க்கருளாயே. (௮)

அந்தண்மாதவி புன்னைநல்லவசோகமு மரவிந்தமல்லிகை
பைந்தஞாழல்கள்சூழ் புறவார்பனங்காட்டூ
ரெந்திளம்முகில்வண்ணனான் முகனென்றிவர்க் கரிதாய்விரிந்ததோர்
சந்தமாயவனே தவத்தார்க்கருளாயே. (௯)

நீணமார்முருகுண்டுவண்டின் நீலமா மலர்கவ்விநேரிசை
பாணில்யாழ்முரலும் புறவார்பனங்காட்டூர்
நாணழிந்துழல்வார்சமணருநம்பில் சாக்கியருநகத்தலை
பூணுரியவனே யுகப்பார்க்கருளாயே. (௰)

மையினார்மணிபோன்மிடற்றனையாசில்வெண்பொடிப்பூசுமார்பனைப்
பையதேன்பொழில் சூழ்புறவார்பனங்காட்டு
ரையனைப்புகழானகாழியுளாய்ந்த நான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார் சிவலோகஞ்சேர்வாரே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.